1984 மார்ச் 9]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : வேலூர்-ரெட்டிபாளையம் தடத்தில் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் தற்போது ஒரு பேருந்தை இயக்கி வருகிறது. வேலூர்-ரெட்டிபாளையத்திற்கு இடையே உள்ள கிராமங்களுக்கு இதனால் போதுமான பேருந்து வசதி கிடைப்பதாலும், கூடுதல் பேருந்து இயக்குவதற்கான பயணிகளின் விகிதம் இத்தடத்தில் இல்லாததாலும், இத்தடத்தில் தற்போது கூடுதல் பேருந்து இயக்குவதற்கான கருத்துரு ஏதும் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்திடம் இல்லை.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : 6—3—1984 அன்று ஒத்திப் போடப்பட்ட வினாக்கள் தற்போது எடுத்துக்கொள்ளப்படும்.

வேலூரில் தமிழ் நாடு தோல் வளர்ச்சி நிறுவனம் துவக்குதல்

***59 வினா.—திரு. க. அருணாசலம் (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் சார்பில்) :** மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆற்காடு மாவட்டம், வேலூரில், தமிழ் நாடு தோல் கார்ப்பரேஷன் துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : (அ) மற்றும் (இ) தமிழ் நாட்டில் தோல் தொழில் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்க, தமிழ் நாடு தோல் வளர்ச்சி நிறுவனம் ஒன்றை அரசு நிறுவியுள்ளது. சென்னையில் பதிவு அலுவலகம் கொண்ட இந்நிறுவனம் அண்மையில் செயல்படத் துவங்கியுள்ளது.

மண்டல கயிறு வளர்ச்சி மற்றும் பயிற்சி நிலையம்

***60 வினா.—திரு. க. அருணாசலம் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்) :** மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பிள்ளையார்பட்டியில் மண்டல கயிறு வளர்ச்சி மற்றும் பயிற்சி நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்: (அ) ஆம்.

(இ) தஞ்சாவூர் மாவட்டம் பிள்ளையார்பட்டி கிராமத்தில் ஒரு மண்டல கயிறு வளர்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தினை ரூ. 50.90 லட்சம் செலவில் நிறுவிட கயிறு வாரியம் முன்வந்துள்ளது. இந்நிலையம் நிறுவிட 10 ஏக்கர் புறம்போக்கு நிலத்தை தமிழ்நாடு அரசு வழங்கி உள்ளது. கயிறு வாரியத்தினால் இந்த நிலையம் விரைவில் கட்டி முடிக்கப்பட்டு துவங்கப்படும். மேலும் இந்நிலையம் வாடகைக் கட்டிடத்தில் விரைவில் துவங்கப்படும்.

உடுக்குறியிடாத வினாக்கள்

Teachers with Post-Graduate Degrees in High Schools.

1. Q.—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether it is a fact that Teachers with Post-Graduate Degrees in High Schools under bifurcated courses are eligible to be deployed in Higher Secondary Schools, to handle languages and subjects in which they have acquired such degrees;

(*b*) if so, the total number of such Teachers as on 1st July 1980; and

(*c*) the number among them deployed in the said Schools?

விடை—

(அ) ஆம். முன்னாள் இருமுனைப்பாட ஆசிரியர்களில் முதுகலைப் பட்டமும், ஆசிரியர் பயிற்சியில் பட்டமும் பெற்றவர்கள் மேல்நிலை வகுப்புகளுக்கு மொழி மற்றும் பாட ஆசிரியர்களாக நியமிக்கப்படலாம்.

(இ) 1—7—1980 நிலவரப்படி, இருமுனைப்பாட ஆசிரியர்கள் 12 பேர் அவ்வாறு தகுதிபெற்று இருந்தனர்.

(உ) அவர்களுள் நான்கு ஆசிரியர்கள் மேல்நிலை வகுப்புகளுக்குப் பாடம் கற்பிக்க நியமிக்கப்பட்டுள்ளனர்.

Job Security for Staff in Collegiate Education.

2. *Q.*—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether it is a fact that as per the Proceedings of the Director of Collegiate Education Rc. No. 65584/S7/78, dated